# அன்னை பூபதி
# தமிழ்க் கலைக்கூடம்

## தமிழ்மொழி
## ஆண்டிறுதிப் பரீட்சை
## ஆனி 2012

## ஆண்டு 8

பெயர்: ____________________

வகுப்பு: ____________________

புள்ளிகள்: ____________________

____________________ ____________________

(ஆசிரியர் ஒப்பம்) (பெற்றோர் ஒப்பம்)

## பகுதி 1

**① மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து, விடைக்கான எழுத்துக்குரிய கூட்டில் புள்ளடி (X) இடுக.**

1. தானம் என்பதன் பொருள்
   அ) கொடை ஆ) இரக்கம் இ) கோபம் ஈ) அன்பு
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

2. செயப்படுபொருள் குன்றிய வினைக்கு எடுத்துக்காட்டு
   அ) ஆடினான் ஆ) பாடினான் இ) எழுதினான் ஈ) ஓடினான்
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

3. ஓர் இலையின் பருவப்பெயர்கள் ஒழுங்கு முறையில்
   அ) தளிர்,இலை,கொழுந்து,பழுப்பு,சருகு ஆ) கொழுந்து,தளிர்,இலை,பழுப்பு,சருகு
   இ) கொழுந்து,இலை,தளிர்,பழுப்பு,சருகு ஈ) இலை,தளிர்,கொழுந்து,பழுப்பு,சருகு
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

4. எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா
   அ) வெள்ளிவிழா ஆ) பவளவிழா இ) பொன்விழா ஈ) வைரவிழா
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

5. நாளை பள்ளிக்கு போவேன். இச்சொல்லியத்தில் வந்துள்ள தோன்றா எழுவாய்
   அ) நீ ஆ) நீங்கள் இ) நான் ஈ) நாங்கள்
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

6. சொல்லியத்தில் இடம்பெறும் எழுவாய், செயப்படுபொருள் என்பன
   அ) பெயர்ச்சொற்கள் ஆ) வினைச்சொற்கள்
   இ) இடைச்சொற்கள் ஈ) உரிச்சொற்கள்
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

7. அதியமான் நெல்லிக்கனியை கொடுத்தது
   அ) துறவிக்கு ஆ) ஔவைக்கு இ) காவலனுக்கு ஈ) மனைவிக்கு
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

8. தமிழரின் புத்தாண்டு நாள்
   அ) வாணிவிழா ஆ ஆடிப்பிறப்பு இ) தைப்பொங்கல் ஈ) மாட்டுப்பொங்கல்
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

9. “தென்திசையைப் பாரக்கிறேன்” என்ற பாடலைப் பாடியவர்,
   அ) பாரதியார் ஆ) அதியமான் இ) காளமேகம் ஈ) பாரதிதாசன்
   (அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

10. வீடு + முற்றம் என்பதைச் சேர்த்து எழுதினால்
அ) வீட்டுமுற்றம் ஆ) வீட்டின்முற்றம் இ) முற்றம் ஈ) வீடுமுற்றம்
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

11. ஒரு பொருளின் இயற்பெயர் அவற்றோடு தொடர்புடைய வேறு பொருட்களுக்குப் பெயராகி வரும்போது அது அழைக்கப்படுவது
அ) ஆகுபெயர் ஆ) இயற்பெயர் இ) ஆகுபொருள் ஈ) பொருட்பெயர்
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

12. பின்வருவனவற்றுள் இடையின மெய்யெழுத்துக்கூட்டம்
அ) ங்,ற்,ய்,ந்,ம்,ன் ஆ) ய்,ர்,ல்,வ்,ழ்,ள் இ) க்,வ்,ச்,ன்,ண்,ப் ஈ) ங்,ஞ்,ண்,ந்,ம்,ன்
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

13. கனிமொழி நடனம் ஆடுகிறாள். இச்சொல்லியம்
அ) கூட்டுச்சொல்லியம் ஆ) தனிச்சொல்லியம்
இ) கலப்புச்சொல்லியம் ஈ) கூட்டுக்கலப்புச்சொல்லியம்
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

14. யானையின் இளையது கன்று என்பது போல் கிளியின் இளையது
அ) குட்டி ஆ) பிள்ளை இ) கன்று ஈ) குஞ்சு
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

15. இலங்கை வரலாற்றில் இறுதித் தமிழ் மன்னன்
அ) விக்கிரமசிங்கன் ஆ) சங்கிலியன் இ) எல்லாளன் ஈ) பண்டாரவன்னியன்
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

16. மேல்பற்றுமூலைக் கதிர்காமநாயகம் வன்னியில் பிறந்த ஒரு
அ) புலவன் ஆ) இரண்டகன் இ) பெருவீரன் ஈ) பற்றாளன்
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

17. **‘ஆசுகவி’** என்பதன் பொருள்
அ) கவிபாடல் ஆ) வைதல் இ) வசைப்பாடல் ஈ) சுவைப்பாடல்
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

18. முல்லைக்கு எவ்விதத்தில் உன் முகம் எழில் குறைவாயிற்று என்று பாடலாசிரியர் கேட்டது
அ) செவ்வந்தியை ஆ) கொடிமல்லிகையை
இ) காட்டுமல்லிகையை ஈ) ஊராரை
(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

19. ஒரே நேரத்தில் இரண்டு செயல்களில் ஈடுபடுவதைக் காட்டும் மரபுத்தொடர்
அ) தலைகவிழ்தல் ஆ) ஆழம்பார்த்தல்
இ) இரண்டு தோணியில் கால் வைத்தல் ஈ) ஒற்றைக்காலில் நிற்றல்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

20. உடமைப்பொருளை உணர்த்தும் வேற்றுமை
அ) ஆறாம்வேற்றுமை ஆ) ஐந்தாம்வேற்றுமை
இ) ஏழாம்வேற்றுமை ஈ) மூன்றாம்வேற்றுமை

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

21. "என்று தணியும் இந்த சுதந்திரதாகம்" என்று பாடியவர்
அ) அதியமான் ஆ) பாரதியார் இ) திருவள்ளுவர் ஈ) காளமேகப்புலவர்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

22. பிட்டும் மாம்பழமும் சேர்த்துஉண்ணச் சுவையாகஇருக்கும். இதில் வந்த இடைச்சொல்,
அ) பிட்டு ஆ) மாம்பழம் இ) உம் ஈ) பழம்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

23. திரிதல் புணர்ச்சிக்கு எடுத்துக்காட்டு
அ) விலை + பட்டியல் ஆ) பணம் + வரவு இ) கண் + நீர் ஈ) பலா + பழம்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

24. நரி ஊளையிடும், சிங்கம்
அ) கனைக்கும் ஆ) உறுமும் இ) முழங்கும் ஈ) பிளிறும்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

25. பெயரெச்சத்துக்கான எடுத்துக்காட்டு
அ) கட்டினான் ஆ) எழுதிய இ) எழுதி ஈ) கட்டுவித்தான்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

26. நகமும் சதையும் போல, இவ் உவமைத்தொடருக்குரிய சமமான பொருள் தரும் உவமைத்தொடர்
அ) பூனையும் எலியும் போல ஆ) பூவும் மணமும் போல
இ) கீரியும் பாம்பும் போல ஈ) நீர் மேல் எழுத்துப்போல

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

27. வானில் கார் என்றும் நிலத்தில் நீர் என்றும் பெயர் பெற்ற பொருள்
அ) பேர் ஆ) நேர் இ) மோர் ஈ) வார்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

28. இயலும் இசையும் கலந்த நடிப்பாலும் பேச்சாலும் கருத்துகளைப் புலப்படுத்துவது
அ) நாடகத்தமிழ் ஆ) பைந்தமிழ் இ) இயற்றமிழ் ஈ) இசைத்தமிழ்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

29. திருவிழாவிற்கு ஊரெல்லாம் திரண்டு வந்தது. இது எவ்வகை ஆகுபெயர்?
அ) இடவாகுபெயர் ஆ) குணவாகுபெயர் இ) பொருளாகுபெயர் ஈ) தொழிலாகுபெயர்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

30. உயர்திணையாய் இருந்தும் பால் காட்டாத சொல்
அ) தமிழினி ஆ) குழந்தை இ) அண்ணா ஈ) அவர்கள்

(அ) ☐ (ஆ) ☐ (இ) ☐ (ஈ) ☐

(30 புள்ளிகள்)

## பகுதி 2

**① தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு முழுவிடை எழுதுக.**

1. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்கள் எக்கழக காலத்தில் தோன்றியவை?

________________________________________

________________________________________

2. பண்டாரவன்னியனால் ஆங்கிலேயரிடமிருந்து கைப்பற்றிய கோட்டைகள் எவை?

________________________________________

________________________________________

3. கவிஞர் காட்டுமல்லிகையைப் பாடற்பொருளாக்கிப் பாடக் கரணியம் யாது?

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

4. "மன்னவனே! ஏன் அழைத்தாய் எனத்தெரியும் மாற்றானாம் தொண்டைமானிடம் எனைத் தூதாக அனுப்பத்தானே." இது யாரால் யாருக்கு, எப்போது கூறப்பட்டது?

5. கதிரவன் எவ்வகையில் எமக்கு உதவுகிறான்?

6. பாரதியார் வாழ்ந்த காலத்தில் பெண்களின் நிலை எவ்வாறு இருந்தது?

7. "உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு" இக்குறளின் பொருளைத் தருக?

(10 புள்ளிகள்)

## ② இலக்கண, மொழியில் வினாக்கள் ஆறில் ஐந்திற்கு விடை எழுதுக.

1. (அ) ஆகுபெயர் என்றால் என்ன?

______________________________

______________________________

(ஆ) குணவாகுபெயரை எடுத்துக்காட்டுடன் தருக?

______________________________

2. (அ) விகாரப்புணர்ச்சி மூன்றையும் எழுதுக.

______________________________

______________________________

(ஆ) தோன்றல் புணர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

______________________________

3. (அ) வேற்றுமை உருபுகள் எத்தனை வகைப்படும்?

______________________________

(ஆ) இரண்டாம் வேற்றுமைக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

______________________________

4. (அ) சொல்லிய உறுப்புகள் எவை?

______________________________

______________________________

(ஆ) தனிச்சொல்லியம் ஒன்று தருக.

______________________________

______________________________

5. (அ) பொருள் தருக.

எழில் = ____________________ நகுதல் = ____________________

(ஆ) தரப்பட்டுள்ள உயிரினங்களின் ஒலிக்குரிய பெயர்களைத் தருக

நாய் ____________________ கிளி ____________________

6. தரப்பட்டுள்ள சொற்களை பகுதி, இடைநிலை, விகுதி எனப் பிரித்து எழுதுக.

(அ) உண்டான் ____________________ (ஆ) படித்தான் ____________________

(புள்ளிகள் 10)

## ③ பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

ஏர் முனைக்கு நேர் இங்கே எதுவுமேயில்லை
என்றும் நம் வாழ்விலே பஞ்சமேயில்லை
பூமியிலே மாரியெல்லாம் சூரியனாலே
பயிர் பூப்பதுவும் காய்ப்பதுவும் மாரியினாலே
நாம் சேமமுற நாள்முழுதும் உழைப்பதனாலே
இந்த தேசமெல்லாம் செழித்திடுது நம்ம கையாலே
நெற்றி வேர்வை சிந்தினோமே முத்து முத்தாக
அது நெல் மணியாய் விழைந்திருக்கு கொத்துக் கொத்தாக
பக்குவமாய் அறுத்து அதை கட்டுக் கட்டாக
அடிச்சு பதறு நீக்கி குவிச்சு வைப்போம் முத்து முத்தாக.

1. பூமியிலே மாரியெல்லாம் எதனால் ஏற்படுகிறது?

______________________________________________

______________________________________________

2. பயிர் பூப்பதுவும் காய்ப்பதுவும் எதனாலே என இப்பாடலில் கூறப்படுகிறது?

______________________________________________

______________________________________________

3. இந்தத் தேசமெல்லாம் செழிப்பது யாராலே?

______________________________________________

______________________________________________

4. நெல்மணிகள் எப்படி விழைந்திருப்பதாக இங்கு கூறப்படுகிறது?

______________________________________________

______________________________________________

5. இப்பாடலில் இடம்பெறும் பெயர்ச்சொற்கள் ஐந்து தருக ?

______________________________________________

______________________________________________

(10 புள்ளிகள்)

## ④ பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.

வேலைசெய்யும் இளைஞர்களில் நான்கில் ஒரு பங்கினர் பெற்றோர் அல்லது பாதுகாவலருடன் வாழ்கின்றனர் என்று பல கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன. 2007 ஆம் ஆண்டிலிருந்து, 18 இலிருந்து 29 வயதிற்கு இடைப்பட்டவர்களில் பெற்றோருடன் தங்கியிருப்போர் தொகை 5% ஆக அதிகரித்துள்ளது. இளையோர் பெற்றோருடன் வாழும்பொழுது அவர்களின் நாளாந்த செலவீனங்களைப் பெற்றோர் கவனிப்பதால், வேலைபார்க்கும் அவர்களிடம் பணப்புழக்கம் அதிகமாக இருக்கும்.

பொதுவாகவே இளையோர் புதிதாக விற்பனைக்குவரும் ஆடைகள், பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர்; இணைய இணைப்பு, வாகனம், தொலைக்காட்சி, கைத்தொலைபேசி போன்றவற்றிற்கும் அதிகம் செலவு செய்கின்றனர். இப்பொருட்களை வாங்கிய பின் அவற்றுக்குரிய செலவீனங்களைப்பற்றிச் சிந்திக்கமாட்டார்கள். இதனால், இவர்கள் தனியாக வாழத்தொடங்கும்பொழுது செலவீனங்களைச் சமாளிக்க முடியாமல் சிரமப்படுகின்றனர்.

பெற்றோர் தமது பிள்ளைகளுக்குச் சிறுவயதிலிருந்தே சேமிக்கும் பழக்கம், செலவுகளைக் கட்டுப்படுத்தும் முறை போன்றற்றைச் சொல்லிக்கொடுக்க வேண்டும். வயது வந்து இளைஞர்களாகி வேலைசெய்யும்போது, பெற்றோருடன் சேர்ந்து வாழ்வதில் தவறில்லை. இப்படி வாழும் காலத்தில் தாம் உழைக்கும் பணத்தை நல்ல முறையில் பயன்படுத்தப் பழகிக்கொள்ள வேண்டும். வீட்டில் பெற்றோருடன் வாழும்போது பொறுப்புணர்வுடன் வாழ்வார்களாயின் பின்பு தனித்து வாழும்பொழுது சிறந்த ஒரு எதிர்காலத்தை அமைத்துக்கொள்ள முடியும்.

1. வேலைசெய்யும் இளையோரில் எத்தனை பங்கினர் பெற்றோருடன் சேர்ந்து வாழாது தனித்து வாழ்கின்றனர்?

______________________________

______________________________

2. உழைக்கும் காலத்தில் பெற்றோருடன் சேர்ந்து வாழ்வதால் கிடைக்கக்கூடிய நன்மைகள் எவை?

______________________________

______________________________

3. மேலுள்ள உரைப்பகுதிக்கு ஒரு தலையங்கம் இடுக?

______________________________

______________________________

4. பிரித்துஎழுதுக.

(அ) தவறில்லை ____________________ (ஆ) கருத்துக்கணிப்பு ____________________

(இ) எதிர்காலம் ____________________ (ஈ) பொறுப்புணர்வு ____________________

5. உரைப்பகுதியிலிருந்து நீர் கடைப்பிடிக்க விரும்புவது என்ன?

______________________________

______________________________

(10 புள்ளிகள்)

## ⑤ வாழிடமொழியில் தரப்பட்ட பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

Da Europeerne kom til Ceylon (Sri Lanka) var øya delt i tre kongedømmer. Portugiserne var de første om ankom landet, og ble koloniherrer. Britene tok over makten attenfemten-tallet. I Attentrettitre ble de tamilske og singalesiske kongedømmene slått sammen til en stat.

(10 புள்ளிகள்)

## ⑥ பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து, 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

### 1. தமிழ் இலக்கிய வளம்

- தமிழின் தொன்மை/ கழகம் அமைத்து தமிழ் வளர்த்தமை
- இனிமை, இளமை, செம்மை
- முத்தமிழ்ப் பிரிவு
- தமிழிலுள்ள இலக்கியங்கள்/ ஐம்பெருங்காப்பியங்கள்
- தமிழ் அன்னைக்கு அழகு சேர்ப்பன

### 2. உலக வெப்பம் அதிகரித்தல்

- வளிமண்டலம் மாசடைதல் - ஓசோன் சிதைவு
- உந்துகளின் புகை - விண்பயணம்
- தீங்குகள் - துருவ உறைபனி கரைதல்- வளி வெப்பமடைதல்
- கடல்மட்டம் உயர்வு - கடற்கோள்கள்
- நோய்கள் பரவுதல் - புதிய நோய்கள் - உயிர்கள் அழிதல்
- நீக்கும் வழி - இயற்கைச்சூழல் பாதுகாப்பு - புகைக்கழிவுகளை வடிகட்டல்

**3. பண்டாரவன்னியன்**

- புகழ் பூத்த ஆட்சி /வரலாற்றுச் சிறப்பு
- கைப்பற்றப்பட்ட கோட்டைகள்
- பீரங்கிகள் கைப்பற்றல்
- ஆங்கிலேயர் மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களில் இருந்து படையெடுத்தல்
- பின்வாங்கி மறைந்திருந்து படைதிரட்டல்
- காட்டிக்கொடுக்கப்படல் /உயிர்நீத்தல், நடுகல் அமைத்தல்

**4. நீர் பார்த்துச் சுவைத்த ஒரு திரைப்படம்**

(20 புள்ளிகள்)